வணிகக்கல்வி

காசோலையைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்திக் கொள்ளக்கூடிய முறைகள்



e தக்சலாவ™
கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 7.6 :
காசோலைகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்திக் கொள்ளக்கூடிய முறைகளை சுட்டிக் காட்டுவார்.

காசோலை

நடைமுறை வைப்பு உரிமையாளர் (காசோலை வரைவோன்) அதில் குறிப்பிட்டுள்ள அதாகையினைப் பெயர் குறிப்பிட்ட நபருக்கு (பெறுவோன்) அல்லது கொண்டு வருபவருக்குச் செலுத்துமாறு வங்கிக்கு (வரையுணி) இடும் எழுத்து மூலமான கட்டளை காசோலை எனப்படும்.

காசோலையுடன் தொடர்புடைய பிரதான பிரிவினர்கள்

1. காசோலை வரைபவர்

Drawer

நடைமுறைக்கணக்கு உரிமையாளரே கட்டளையிடப்படுபவராக இருப்பார். அதாவது காசோலையை எழுதி அதில் கையொப்பம் இடுபவரே கட்டளையிடுபவராவார்.

2. வரையுணி/ கட்டளையைப் பெறுபவர்

Drawee

குறித்த நடைமுறைக் கணக்கினைப் பேணும் வணிக வங்கியே வரையுணி ஆவார். அதாவது காசோலையை வரைபவரின் வங்கியேயாகும்.

3. பெறுவோர்/பணம் பெறுபவர்

Payee

காசோலையில் குறிப்பிட்ட தொகையினை பெறுவதற்கு உரிமையுள்ள காசோலையில் பெயர் குறிப்பிட்ட நபர் இவராவார்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காசோலையொன்றின் அடிப்படைப் பண்புகள்
(Basic characters of cheque)

காசோலையின் மாதிரி வரைபடம்



1. திகதி
2. வங்கியின் பெயரும் கிளையின் பெயரும்
3. பெறுவோரின் பெயர்
4. அல்லது கொண்டு வருபவருக்கு என்ற உள்ளீடு
5. காசோலையின் பெறுமானம் எழுத்திலும் இலக்கத்திலும்
6. செலுத்தவும் என்ற சொல்
7. பிறப்பிப்பவர் கையொப்பம்
8. காந்த மை நிரல் (முறையே காசோலை இலக்கம், வங்கியின் இலக்கம், கிளை இலக்கம், கணக்கு இலக்கம், போன்றன காணப்படும்.)
9. காசோலையின் அடிக்கட்டை

தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காசோலையின் வகைகள்

பிரதானமாக காசோலை இரு வகைப்படும்

காவியின் காசோலை (Bearer Cheque)

காசோலையினை எவரும் வங்கியின் கருமபீடத்தில் சமர்பித்து நேரடியாக காசாக்கக்கூடிய வகையில் பிறப்பிக்கபடும் காசோலை காவியின் காசோலை ஆகும். அதாவது காசோலையில் அச்சிடப்படடுள்ள “ **அல்லது கொண்டு வருபவருக்கு**” என்ற சொல் வெட்டப்படாது விடப்பட்டுள்ள காசோலை இதுவாகும்.

புறக்குறிப்பிடலின்றி (சாட்டுனர்) காவியின் காசோலையை இன்னொருவருக்கு ஒப்படைக்க முடியும்.
இது பெரும்பாலும் பணத்தினால் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு ஒத்ததாகும்.

கட்டளைக் காசோலை (Order Cheque)

காசோலை பிறப்பிக்கப்பட்டுள்ள நபர் மட்டும் வங்கியில் நேரடியாக பணமாக்கக்கூடிய வகையில் பிறப்பிக்கப்படடுள்ள காசோலைகள் கட்டளைக் காசோலைகள் ஆகும்.
அதாவது “ **அல்லது கொண்ட வருபவருக்கு**” என்ற சொல்லை வெட்டி அல்லது அதற்குப் பதிலாக “ **கட்டளைக்கு**” என எழுதப்பட்டுள்ள காசோலை ஆகும்.

இக்காசோலையினனை இன்னொருவருக்கு சாட்டுதல் செய்யும் போது புறக்குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.
இக்காசோலை பாதுகாப்பானதாகும்.

காசோலை ஒன்றைப் பிறப்பிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் :



தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காசோலையில் கோடிடல்

காசோலையில் முகப்பில் குறுக்காக இரு சமாந்தரக் கோடுகளை வரைதல் அல்லது வணிக வங்கியொன்றின் பெயரை எழுதுதல் காசோலையில் கோடிடல் ஆகும்.

காசோலையுடன் தொடர்புடைய எந்தவொரு பிரிவினருக்கும் கோடிடலை மேற்கொள்ள முடியும்.

ஆனால் இடப்பட்ட கோட்டை காசோலையை பிறப்பித்தவரால் மாத்திரமே இரத்துச் செய்ய முடியும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

கோடிடலின் வகைகள்

கோடிடலின் வகைகள் இரண்டாகும்.

1) பொது முறைக் கோடிடல் (General Crossing)

காசோலையின் முகப்பில் இரு சமாந்தரமாக கோடுகளை அல்லது இரு சமாந்தரக் கோடுகளுடன் அக்கோடுகளுக்குள் வங்கி தவிர்ந்த சில கூற்றுக்களையும் குறிப்பிடுவதை இது குறிக்கும்.



எந்தவொரு நடைமுறைக் கணக்கிலாவது வைப்புச்செய்து பணமாக்க முடியும்.

கைமாறத்தக்கது — **இவ்வாறான காசோலையினை புறக்குறிப்பிட்டு இன்னொருவருக்கு சாட்டுதல் செய்ய முடியும். எனினும் சாட்டப்படுவோனுக்கு சாட்டுபவரை விடக்கூடிய உரிமை கிடைக்கப்பெறாது என்பதாகும்**

பெறுவோன் கணக்கு மட்டும் — **காசோலையில் பெயர் குறிப்பிடுடப்பட்ட பெறுபவரின் கணக்கில் மட்டும் அதனை வைப்புச் செய்து பணமாக்கலாம் என்பதாகும்.**

ரூ5,000 வரை மட்டும் — **குறிப்பிட்ட தொகையை விடக் கூடியதாக காசோலையில் பணத்தொகையினை குறிப்பிடக்கூடாது.**

2) சிறப்பு முறைக் கோடிடல் (Special crossing)

காசோலையின் முகப்பில் இரண்டு சமாந்தரக் கொடுகளையும் அச்சமாந்தரக் கோடுகளுக்கு இடையில் வணிக வங்கியின் பெயரை அல்லது வங்கிக் கிளையின் பெயரினை குறிப்பிடுதல் சிறப்பு முறைக் கோடிடல் ஆகும்

இலங்கை வங்கி - இதனை இலங்கை வங்கியின் ஏதாவதொரு நடைமுறை கணக்கிலும் வைப்பிலிட்டு காசாக்கலாம்

கைமாறத்தகாதது மக்கள் வங்கி - இதனை கைமாற்றம் செய்ய முடியும் அதனைப் பெறுபவர் காசோலையை வழங்குபவருக்கு சட்டரீதியான உரிமை உண்டா என அவதானித்து பெற்றுக் கொள்ளல் சிறந்தது

பெறுவோன் கணக்கு மட்டும் மக்கள் வங்கி - இதனை கைமாற்றம் செய்ய முடியாது குறித்த நபரின் மக்கள் வங்கியில் உள்ள கணக்கில் லைப்பிலிட்டு பணமாக்க முடியும்.

ரூபா 5000 வரை மட்டும் இலங்கை வங்கி, வரக்கா பொல - இதனை குறித்த வங்கியின் குறித்த கிளையிலுள்ள குறித்த நபரின் கணக்கில் வைப்பிலிட்டு காசாக்க முடியும்.

தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காசோலையில் புறக்குறிப்பிடல் (Endorsement)

காசோலையை வேறோருவருக்கு உரிமை மாற்றம் செய்வதற்காக காசோலையின் முகப்பிலுள்ளவாறு காசோலையின் பின்புறத்தில் பெயரினை எழுதுதல் புறக்குறிப்பிடல் ஆகும்.

காசோலை சட்ட ரீதியாக சாட்டப்பட்டது என்பது புறக்குறிப்பிடல் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

புறக்குறிப்பிடுதல் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்கள்

- பெறுபவர் வங்கியில் காசோலையினை வைப்புச் செய்யும் போது
- கட்டளைக் காசோலையின் இன்னொருவருக்குச் சாட்டுதல் செய்யும் போது
- கோடிடப்படாத காசோலையினை வங்கிக் கருமபீடத்தில் வழங்கிப்பணம் பெறும் போது

Copyright © e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

காசோலை மறுக்கப்படல்

‘ வாடிக்கையாளரால் வரையப்பட்ட காசோலைக்கு வங்கி பணம் செலுத்துவதற்கு மறுத்தல்’ காசோலை மறுக்கப்படல் எனப்படும்.

காசோலை மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் :



ஒப்படை

நாதன் என்பவருக்கு ரூபா 50,000 பணத்தொகையினை கபில் செலுத்த வேண்டியுள்ளது. கபிலின் நடைமுறைக் கணக்கு கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையிலும், நாதனின் நடைமுறைக்கணக்கு யாழ்ப்பாண கிளையிலும் பேணப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட தொகையினை காசோலை மூலம் கபில் செலுத்துவதற்கு எண்ணுகின்றார். காசோலையொன்றின் மாதிரியினை வரைந்து உச்ச பாதுகாப்பு கிடைக்கும் வகையில் அதனை எழுதிக் காட்டவும்.

தொகுப்பு :- திருமதி. சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு

கணினி வடிவமைப்பு :- திரு.இ.சிறிதரன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk